RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 5 | ஜனவரி.10 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ஜன.28ல் கூடுகிறது நாடாளுமன்ற கூட்டத் தொடர்; பிப்.1ல் பட்ஜெட் தாக்கல்

புதுடெல்லி, ஜன.10-

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 28ம் தேதி கூடுகிறது. அடுத்த நிதி ஆண்டுக்கான பட்ஜெட் பிப்.1ம் தேதி தாக்கல் செய்யப்பட இருக்கிறது.



நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடர்பாக நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவால் இறுதி செய்யப்பட்ட தற்காலிக அட்டவணையை மேற்கோள்காட்டி, அதிகாரிகள் கூறி இருப்பதாவது: நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 28ம் தேதி கூட உள்ளது. ஆண்டின் முதல் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் என்பதால் வழக்கம்போல் குடியரசுத் தலைவரின் உரையுடன் கூட்டத் தொடர் தொடங்கும். ஜன.28 ம் தேதி நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றுவார்.

குடியரசு தின விழாவில் பங்கேற்கும் முப்படைகள், மீண்டும் படைக்குத் திரும்பும் பீட்டிங் ரீட்ரீட் விழா ஜன.29ம் தேதி நடைபெற உள்ளதால் அன்றைய தினம் நாடாளுமன்றம் கூடாது. ஜன.30ம் தேதி நாடாளுமன்றம் கூடும். அன்றைய தினம் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. ஜன. 31 அன்று நாடாளுமன்ற இரு அவைகளும் கூடாது.

மத்திய பட்ஜெட் பிப்.1 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று தாக்கல் செய்யப்பட உள்ளது. நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டை தாக்கல் செய்வார்.

குடியரசுத் தலைவரின் உரை மற்றும் மத்திய பட்ஜெட் ஆகியவற்றுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதங்களுக்குப் பிறகு பிப். 13 அன்று நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும். ஏறக்குறைய ஒரு மாத கால ஒத்திவைப்புக்குப் பிறகு மார்ச் 9ம் தேதி நாடாளுமன்றம் மீண்டும் கூடும். கூட்டத்தொடர் ஏப்ரல் 2ம் தேதி முடிவடையும்.

வழக்கமாக நாடாளுமன்ற கூட்டத்தொடர் வெள்ளிக்கிழமைகளில் ஒத்திவைக்கப்படும். ஆனால், ஏப்ரல் 3ம் தேதி புனித வெள்ளி என்பதால் ஏப்ரல் 2ம் தேதியே நாடாளுமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படும். இவ்வாறு அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## இது ஒரு கட்சியின் ஆட்சி அல்ல, ஓர் இனத்தின் கட்சி

### முதல்வர் ஸ்டாலின் பேச்சு




சென்னை, ஜன.10-

தமிழக மக்களை நேரில் சந்தித்து அவர்களது கனவுகளை அறியும் வகையில், 'உங்க கனவை சொல்லுங்க' என்ற திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (09.01.26) திருவள்ளூர் பொன்னேரியில் தொடங்கி வைத்தார். 50,000 தன்னார்வலர்கள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 1.91 கோடி குடும்பங்களை நேரில் சந்தித்து அவர்கள் பயன்பெற்ற திட்டங்கள் மற்றும் அவர்களை கனவுகளை கண்டறிந்து பணிகள் மேற்கொள்வதற்காக இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்த பின் உரையாற்றியதாவது, "உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கூடிய இந்த அரசு, மக்களான உங்களிடம் கனவை கேட்டு நிறைவேற்றும் நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது. உங்கள் கனவை சொல்லுங்க, அதை நிறைவேற்றி கொடுப்பதற்காக நான் இங்கு வந்திருக்கிறேன். திருச்சியில் மாநாடு நடந்த போது என்னுடைய கனவுகள் என்று கூறி 7 வாக்குறுதிகளை கொடுத்தேன். இதையெல்லாம் இப்போது நான் நிறைவேற்றி இருக்கிறோம். சொன்னால் சொன்னதை செய்பவன் தான் நான். இன்றைக்கு தமிழ்நாடு தான் 11.19% வளர்ச்சியோடு இந்தியாவில் சிறந்த மாநிலமாக இருக்கிறது. இந்தியாவுக்குள், முதலீடு செய்ய வேண்டும் என்று எந்த நிறுவனங்களாவது நினைத்தால் அவர்களுடைய முதல் தேர்வு தமிழ்நாடு தான் இருக்கிறது. விவசாயமும் லாபம் தரக்கூடிய தொழிலாக மாறியுள்ளது. இந்தியாவிலேயே கல்விக்காக தமிழ்நாடு செய்கிற அளவுக்கு எந்த மாநிலமும் செய்யவில்லை.

நாம் ஆட்சிக்கு வந்தபோது கொரோனா என்ற கொடுமையான பாதிப்பு உச்சத்தில் இருந்தது. நல்லது எதற்குமே ஒத்துழைக்காத, தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிராக சிந்தித்து செயல்படக்கூடிய பா.ஜ.க தொடர்ந்து ஒன்றிய அரசாக இருக்கிறது. ஆட்சி பொறுப்பில் இருந்து தமிழ்நாட்டு உரிமைகளை எல்லாம் ஆமாம் சாமி போட்டு அடகு வைத்த அதிமுக ஒரு பக்கம். இப்போது எதிர்க்கட்சி ஆனதற்கு பிறகு உண்மைக்கு புறம்பான போலி செய்திகளை எல்லாம் உருவாக்கி அவதூறு செய்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கும் ஒன்றிய அரசுக்கும் பாலமாக இருக்க வேண்டிய ஆளுநர், என்ன செய்கிறார் என்பது உங்களுக்கே தெரியும். உங்களுடைய எண்ணங்களை பிரதிபலித்து சட்டமன்றத்தில் நான் நிறைவேற்றக்கூடிய சட்டங்களுக்கு முட்டைக்கட்டை போடுவதை தன்னுடைய முதல் வேலையாக ஆளுநர் செயல்படுகிறார். இத்தனையும் மீறி மக்களான நீங்கள் எங்களுடன் இருப்பதால் தான் 2021இல் கொடுத்த 505 வாக்குறிதிகளில் 404 வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். இந்த சாதனையை செய்தது திராவிட மாடல் அரசு. ஒன்றிய அரசு நிதியை மறுத்தும் புறக்கணித்தும் அவர்கள் வெளியிடக்கூடிய புள்ளிவிவரங்களில் தவிர்க்க முடியாத அளவுக்கு முதலிடத்தில் இருந்து சாதனை படைத்தது நமது திராவிட மாடல் அரசு. தமிழ்நாட்டின் கஜானாவை சுரண்டிய கடந்த கால அதிமுக ஆட்சியாளர்கள் மக்களால் விரட்டி அடிக்கப்பட்ட பின்னர் என்னவெல்லாமோ சொன்னார்கள்.

தேர்தல் வாக்குறுதிகள் சொல்லாத திட்டங்களையும் தமிழ்நாட்டுக்கு தேவை என்பதால் அதை நிறைவேற்றினோம். நாளைக்கு நம்ம பிள்ளைகள், வளர்ந்து மாணவர்களாக படித்து பெரிய பெரிய வேலைகளில் உட்காரும் போது இந்த திட்டங்களை செயல்படுத்தியதற்காக நமது திராவிட மாடல் அரசை பாராட்டுவார்கள். அதிமுக ஆட்சி காலத்தில் தமிழ்நாட்டுக்கு வந்த பல தொழில் நிறுவனங்கள் பின்னங்கால் பிடலில் அடிபட்டு தலைதெறிக்க ஓடினார்கள். ஆனால் நமது திராவிட மாடல் ஆட்சியில் 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை நாம் எடுத்திருக்கிறோம். ரெக்கார்ட் செய்தால் ரெக்கார்டை பிரேக் செய்ய முடியாத அளவுக்கு ரெக்கார்ட் செய்ய வேண்டும். இது தான் என் பாலிசி. ஒரு கட்சியின் ஆட்சியாக இல்லாமல் ஒரு இனத்தின் ஆட்சியாக இந்த திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்திட்டு இருக்கோம். ஆட்சி என்பது முதலமைச்சரான என்னுடைய கனவுகளை மட்டுமல்ல, வாக்களித்த வாக்களிக்காத உங்கள் எல்லாருடைய கனவுகளை நிறைவேற்றுகிற கருவி. அப்படி உங்கள் கனவுகளை நிறைவேறினால், தமிழ்நாடு முன்னேறும், வளர்ச்சி அடையும்" என்று கூறினார்.

## 'ஜனநாயகன்' படத்தை வைத்து திமுக, காங். கட்சிகள் அரசியல் செய்கின்றன: பாஜக குற்றச்சாட்டு

சென்னை ஜன.10-

தேர்தல் காலம் என்பதால், மக்களை திசை திருப்பும் நோக்கில் 'ஜனநாயகன்' படத்தை வைத்து திமுகவும், காங்கிரஸ் கட்சியும் அரசியல் செய்வதாக பாஜகவின் மாநில செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் குற்றம் சாட்டியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பொதுவாக ஒரு திரைப்படத்தை குடும்பத்துடன் பார்ப்பதற்கு ஏற்ற வகையில் இருந்தால் மட்டுமே தணிக்கைத் துறையால் 'யுஏ' சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஒரு படத்துக்கு இந்தச் சான்றிதழை வழங்க வேண்டுமெனில், அதில் இடம்பெறும் காட்சிகள் மற்றும் வசனங்கள் குறித்த சில சட்ட விதிமுறைகள் உள்ளன. அந்த விதிகளுக்கு உட்பட்டு, திரைப்படத்தை ஆய்வு செய்த பின்னரே தணிக்கைத் துறை சான்றிதழ்களை வழங்கும்.

'ஜனநாயகன்' படத்துக்கு 'யுஏ' சான்றிதழ் வழங்குவதற்காக, சில குறிப்பிட்ட காட்சிகளை நீக்கும்படி படக்குழுவினருக்கு தணிக்கைத் துறை அறிவுறுத்தி உள்ளது. ஆனால், அந்த மாற்றங்களை செய்ய படக்குழுவினர் மறுத்து வருவதாகத் தெரிகிறது. இது முழுக்க முழுக்க தணிக்கைத் துறைக்கும் படக்குழுவுக்கும் இடையிலான நடைமுறைச் சிக்கலாகும்.

இந்த விவகாரத்துக்கும் மத்திய அரசுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. திரைப்படத் துறையில் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் பாஜகவுக்கு இல்லை. ஆனால், வரவிருக்கும் தேர்தலை மனதில் வைத்து, மக்களை திசை திருப்புவதற்காக திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட இண்டியா கூட்டணி கட்சிகள் திட்டமிட்டு மத்திய அரசுக்கு எதிராக அவதூறு பரப்பி வருகின்றன.

உண்மையை உணர்ந்து நடிகர் விஜய் தரப்பினர் இந்த விவகாரத்தில் அரசியல் செய்ய முயலக்கூடாது. 'ஜனநாயகன்' திரைப்படம் விரைவில் வெளியாகி வெற்றி பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யார் முதல்வராக வரக்கூடாது என்பதுதான் எங்களுக்கு முக்கியம்: நயினார் நாகேந்திரன் கருத்து

புதுக்கோட்டை, ஜன.10-

கூட்டணியில் எங்களுக்கு தொகுதி எண்ணிக்கை முக்கியம் அல்ல. யார் முதல்வராக வரக் கூடாது என்பதுதான் முக்கியம் என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே பாஜகவின் தன்னார்வ தொண்டு நிறுவன பிரிவு (என்ஜிஓ) சார்பில் சுதேசி, சுயசார்பு மற்றும் சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் 'வாழ்வாதார அடைக்காப்பகம்' திட்டத் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

என்ஜிஓ பிரிவின் மாநில அமைப்பாளர் இரா.அர்ஜுனமூர்த்தி தலைமை வகித்தார். மாநிலச் செயலாளர் எல்.முரளிதரன் வரவேற்றார். பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் சிறப்புரை ஆற்றினார்.

அமைப்பு பொதுச் செயலாளர் கேசவவிநாயகம், பாஜக மாநிலச் செயலாளர் கருப்பு முருகானந்தம், துணைத் தலைவர் குஷ்பு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பின்னர், நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தேர்தல் கூட்டணி தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி சந்தித்து உள்ளார். நானும் பழனிசாமியை சந்தித்துப் பேச உள்ளேன். கூடுதல் இடங்களைக் கேட்டு பாஜக நெருக்கடி கொடுக்கவில்லை.

எங்களுக்கு தொகுதி எண்ணிக்கை முக்கியம் அல்ல. யார் முதல்வராக வரக் கூடாது என்பதுதான் முக்கியம். அதிமுக பொதுச் செயலாளரை சந்தித்து அன்புமணி பேசியது சட்டவிரோதமானது என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியது தொடர்பாக நான் கருத்து கூற முடியாது.

நடிகர் விஜய்யின் ஜனநாயகன் படத்துக்கு தணிக்கைச்சான்று வழங்காததற்கு பிரதமரை குறை கூற முடியாது. அதை திரைப்பட தணிக்கை வாரியம் பார்த்துக் கொள்ளும்.

நடிகர் விஜய்க்கு காங்கிரஸ் கட்சி ஆதரவாக இருப்பதாக தெரிவதைப் பார்த்தால், காங்கிரஸ் கட்சியினர் நடிகர் விஜய்யுடன் பேசி இருக்கலாம் என்று கருதுகிறேன். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

## 'ஜனநாயகன்' படத்துக்கு உடனடியாக U/A சான்று வழங்க தணிக்கை வாரியத்துக்கு ஐகோர்ட் உத்தரவு

'சென்னை, ஜன.10-

விஜய்யின் 'ஜனநாயகன்' திரைப்படத்துக்கு உடனடியாக யு/ஏ சான்று வழங்க தணிக்கை வாரியத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பிய தணிக்கை வாரிய உத்தரவையும் ரத்து செய்யவதாக தெரிவித்துள்ளது.



நடிகர் விஜய்யின் 'ஜனநாயகன்' திரைப்படம் இன்று (ஜனவரி 9) வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், அப்படத்துக்கு தணிக்கைச் சான்றிதழை வழங்க மத்திய தணிக்கை வாரியம் தாமதித்ததால், தயாரிப்பு நிறுவனமான கே.வி.என் புரொடக்ஷன்ஸ், சென்னை உயர் நீதிமன்றத்தில் அவசர மனு தாக்கல் செய்தது. இந்த வழக்கை நீதிபதி பி.டி.ஆஷா விசாரித்தார்.

தணிக்கை குழு சார்பில் வைக்கப்பட்ட வாதத்தில், "பதில் மனு தாக்கல் செய்ய அனுமதித்தால் நீதிமன்றம் கேட்கும் அனைத்து கேள்விகளுக்கும் முழுமையான பதில் அளிக்கப்படும். இப்படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பியது மத்திய அரசின் முடிவல்ல. படத்தை மறு ஆய்வுக்கு அனுப்ப சென்சார் போர்டு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

திரைப்படத்தில் பாதுகாப்புப் படைகளின் சில சின்னங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த நிபுணர்களிடம் ஆலோசனை பெற்றிருக்க வேண்டும். ஜனநாயகன் படத்துக்கு எதிராக புகாரளித்தவர் தணிக்கைக் குழு உறுப்பினர்.

சில காட்சிகளை நீக்கினால் சான்றிதழ் வழங்கப்படும் என தெரிவித்த பின்னரும் கூட படத்தை மறு ஆய்வுக்கு அனுப்ப அதிகாரம் உள்ளது. இப்படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்குவதில் எந்த உள்நோக்கமும் இல்லை" என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயகன் படக்குழு தரப்பில் வைக்கப்பட்ட வாதத்தில், "பெரும்பான்மை உறுப்பினர் படத்துக்கு சான்று வழங்க பரிந்துரை செய்துள்ளனர். பெரும்பான்மை ஆதரவு இல்லாவிட்டால் மட்டுமே மறு ஆய்வுக்கு அனுப்ப முடியும். ஆனால், ஜனநாயகன் படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்காமல் இழுத்தடிக்கின்றனர்" என படக்குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நீதிபதி பி.டி.ஆஷா, "ஆட்சேபங்கள் பரிசீலிக்கப்படவில்லை என்று மட்டுமே புகாரில் கூறப்பட்டுள்ளது, அந்த புகார் நிலைக்கத்தக்கதல்ல. படத்துக்கு யு/ஏ சான்று வழங்க முடிவு செய்த பின் மறு ஆய்வுக்கு அனுப்பியது ஏன்? யு/ஏ சான்றிதழ் ஒப்புதல் அளித்த குழுவில் இருந்த நபரே எப்படி தனி புகார் அளிக்க முடியும்?" என்று கேள்வி எழுப்பினார்.

இதனை தொடர்ந்து, ஜனநாயகன் படத்தின் தணிக்கை சான்றிதழ் தொடர்பான வழக்கில் இன்றைக்கு (ஜன.9) தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

அதன்படி, நீதிபதி ஆஷா இன்று தீர்ப்பு வழங்கினார். அதில், ஜனநாயகன் படத்தை வெளியிடும் வகையில் படத்துக்கு உடனடியாக ஹி/கி சான்று வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டதோடு மறு ஆய்வுக்கு அனுப்பிய தணிக்கை வாரிய உத்தரவையும் ரத்து செய்தார்.

மேல்முறையீடு செய்ய கோரிக்கை: இதற்கிடையில், 'ஜனநாயகன்' வழக்கில் தீர்ப்பை எதிர்த்து தணிக்கை வாரியம் தரப்பில் மேல்முறையீடு செய்ய தலைமை நீதிபதி முன்பாக முறையீடு செய்யப்பட்டது. அதற்கு, மனுவாக தாக்கல் செய்யுங்கள், பிற்பகலில் விசாரிக்கிறேன் என தலைமை நீதிபதி தெரிவித்திருக்கிறார்.



# அல்லூர் ரேஷன் கடையில் பொங்கல் தொகுப்பினை ஒசெ ஆர். எம் கென்னடி வழங்கினார்

## உமாசங்கர், அல்லூர் ரவி, சக்திதாசன், கர்ண. அருண்குமார் ஆகியூர் பங்கேற்றனர்

காளையார் கோவில், ஜன.10-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆணையின்படி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பச்சரிசி , வெல்லம், சர்க்கரை , முழுநீளக் கரும்பு உள்ளிட்ட பொங்கல் தொகுப்புடன் கூடிய ரொக்கமாக பணம் 3000 த்தையும் வழங்கிட ஆணை பிறப்பிக்கப் பட்டது.

இதனை தமிழ்நாடு முழுவதும் உள்ள உள்ளாட்சி இன்னாள், முன்னாள் பிரதிநிதிகள், கழக மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னணியினர் முன்நின்று வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில் சிவகங்கை மாவட்டக்கழக செயலாளர், தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அறிவுறுத்தலின்படி காளையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் அல்லூர் , பனங்காடி நியாய விலைக்கடையில் பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியை காளையார்கோவில் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆர். எம். கென்னடி கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் உமாசங்கர், பனங்காடி கிளைக்கழக செயலாளர் இராம. பாலாஜி, கழக மூத்த முன்னோடி, நீர்ப்பாசன சங்கத் தலைவர் அல்லூர் ரவிச்சந்திரன், வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சக்திதாசன் , கிளைக்கழக நிர்வாகிகளான கே. ஆர். பாண்டி, மேலமைப்பு பிரதி நிதி தாமோதரன் ,இலுப்பக் கோட்டை கிளைக்கழக செயலாளர் தணுஷ்கோடி, சங்கரலிங்கம், ஒனறிய வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வீராணி சதீஷ்குமார் ,இராணியூர் கிளைக்கழகச் செயலாளர், இளைஞரணி கர்ண. அருண்குமார், சைதை அசோக், மலைச்சாமி, விஜயமாணிக்கம் மலைச்சாமி உள்ளிட்ட காளையார்கோவில் வடக்கு ஒன்றியக்கழக, கிளைக் கழக திமுகவினர் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் மாநகராட்சி 50வது வார்டுக்கு உட்பட்ட ரங்கநாதபுரத்தில் உள்ள ரேசன் கடையில் தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பினை மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொதுசெயலாளர் எம்.யாக்கூப் வழங்கினார்




தாம்பரம், ஜன.10-

தமிழகத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி ஆண்டுதோறும் அரசு சார்பில் பொங்கல் பரிசு தொகுப்பு வழக்கப்பட்டு வருகிறது. அதன்படி, 2026-ம் ஆண்டு தைப் பொங்கலை சிறப்பாகக் கொண் டாடும் வகையில் அரிசி ரேஷன் கார்டுதாரர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் ரொக்க பணத்துடன், பச்சரிசி மற்றும் சக்கரை, முழு கரும்புடன் பொங்கல் தொகுப்பினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காலை ஆலந்தூரில் பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அதன்படி தாம்பரம் மாநகராட்சிக்குபட்ட மேற்கு தாம்பரம் ரங்கநாதபுரம் பகுதிகளிலும் பொங்கல் பரிசு தொகுப்புகள் பல்வேறு ரேசன் கடைகளில் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. பொங்கலை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அரிசி ரேஷன் கார்டுதாரர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் ரொக்க பணத்துடன், பச்சரிசி மற்றும் சக்கரை, முழு கரும்புடன் பொங்கல் தொகுப்பினை தாம்பரம் மாநகராட்சிக்குபட்ட 50வது வார்டுக்குட்பட்ட மேற்கு தாம்பரம் ரங்கநாதபுரத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் பகுதி பொங்கல் பரிசு தொகுப்புகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைப்பெற்றது.

நிகழ்ச்சிக்கு 50வது வார்டு மாமன்ற உறுப்பினரும், மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொதுசெயலாளருமான எம்.யாக்கூப் தலைமை தாங்கி பொதுமக்களுக்கு பொங்கள் பரிசு தொகுப்பினை வழங்கினார்.

பொங்கள் பரிசினை பெறுவதற்காக வருகை தரும் பொதுமக்கள் சிரமின்றி வாங்கும் வகையில் பந்தல், ஷேர் அமைத்து கொடுத்து, தண்ணீர் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு சமய சார்பின்றி தமிழகத்தில் இந்துகள், இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் அனைவரும் சமத்துவ பொங்கல் கொண்டாடும் வகையில் பொங்கள் தொகுப்பினை வழங்கி முதல்வர் முக.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிப்பதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மனிதநேய மக்கள் கட்சி செங்கல்பட்டு மாவட்ட தலைவர் ஜாஹீர் உசேன், திராவிட கழக மாவட்ட தலைவர் முத்தையன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டர்.



# மீன் ஏற்றிச் சென்ற மினிலாரி மின் கம்பத்தில் மோதி விபத்து

சிவகங்கை, ஜன.10-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனிவாசல் புது ரோட்டில் காலை மீன் ஏற்றிக்கொண்டு வந்த மினிலாரி எதிர்பாராத விதமாக மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது அதிர்ஷ்டவசமாக யாருக்கும் எந்தவித உயிர் சேதமும் இல்லை காலையில் நடந்த இந்நிகழ்வில் அப்பகுதியில் சலசலப்பு ஏற்பட்டது.மேலும் இச்சம்பவம் குறித்து காரைக்குடி போலீசார் விசாரணை, விபத்தில் சேதமடைந்த மின் கம்பத்தை சரி செய்யும் பணியில் மின்வாரிய ஊழியர்கள் ஈடுபட்டனர்.

# கிராஸ் கண்ட்ரி 10 கிலோ மீட்டர் ஓட்டப்பந்தயம்

தேவகோட்டை, ஜன10-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான கிராஸ் கண்ட்ரி 10 கிலோ மீட்டர் ஓட்டப்பந்தயம் அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியல் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி விளையாட்டு வீரர்களான ராமச்சந்திரன் முதல் பரிசு பெற்றார். இவர் அகில இந்திய பல்கலைக்கழக இடையிலான போட்டியில் பங்கு பெறவுள்ளார். மேலும் இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடமும், பெண்கள் பிரிவில் மூன்றாம் இடமும் பெற்றனர். வெற்றி பெற்ற மாணாக்கர்களை கல்லூரி நிர்வாகத்தினர்கள், கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் நாவுக்கரசு, உடற்கல்வி இயக்குநர் முனைவர் லூர்துராஜ் மற்றும் இருபால் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உங்க கனவ சொல்லுங்க திட்டத்தை காணொளிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததையொட்டி, இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஜி.எஸ். மகாலில் நடைபெற்ற நேரலை ஒளிபரப்பு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று, நிகழ்ச்சியினை பார்வையிட்டார். உடன் மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் திரு.பாபு அவர்கள் உள்ளார்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளுவர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தை தொடங்கி வைத்தார் அதனை தொடர்ந்து மதுரை மாவட்டம், திருப்பாலை இ.எம்.ஜி.யாதவா கல்லூரியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தின் தன்னார்வலர்களுக்கு கைபேசி இணைப்புக்களை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.தமிழரசி அவர்கள்ஆகியோர் உடன் உள்ளனர்.



## சென்னை இளைஞர் இலக்கியத் திருவிழா போட்டிகளில் வெற்றிபெற்ற

# மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் வழங்கினார்

கடலூர், ஜன.10-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சென்னை இளைஞர் இலக்கியத் திருவிழா போட்டிகளில் வெற்றிபெற்ற 36 மாணவியர்களை பாராட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் திருசிபி ஆதித்யா செந்தில்குமார் சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பி ஆதித்யா செந்தில்குமார் தெரிவிக்கையில்,

மாணவ,மாணவிகளின் தனித்திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையிலும், வகுப்பறை கற்றலுக்கு அப்பால் சென்று மாணவர்கள் தங்கள் ஆர்வங்கள், திறமைகள் மற்றும் தலைமைத்துவ திறன்களை மேன்மைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கும் வகையிலும் பொதுநூலக இயக்ககம் சார்பில் கல்லூரி மாணவர்களிடையே தமிழ், இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம் மற்றும் தமிழ் மரபுகள் ஆகியவற்றை பேணி காப்பதற்காகவும், இலக்கி ஆர்வத்தினை ஊக்குவிப்பதற்காகவும் தமிழ்நாடு முழுவதும் இளைஞர் இலக்கியத் திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில் சென்னை இளைஞர் இலக்கியத் திருவிழா போட்டி 2023ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. 2023 ஆண்டு பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், 2024ஆம் ஆண்டு சி.முட்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் நடைபெற்றது.

தொடர்ச்சியாக 2025ஆம் ஆண்டுக்கான இளைஞர் இலக்கியத் திருவிழா கந்தசாமி நாயுடு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்றது. நூல் அறிமுகம், இரண்டு நிமிடப் பேச்சுப் போட்டி, விவாத மேடை, படத்தொகுப்பு உருவாக்கம், ஓவியப் போட்டி, காலந்தோறும் தமிழ்ப் பேச்சுப் போட்டி. இலக்கிய வினாடி வினா, உடனடி ஹைக்கூ, புத்தக மதிப்புரை, புரோம்ட் இன்ஜினியரிங் உள்ளிட்ட போட்டிகளில் 360 மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டிகளில் மொத்தம் 36 மாணவியர்கள் முதல் 3 இடம் பிடித்து வெற்றி பெற்றுளனர். முதல் இடத்தில் வெற்றிபெற் றவர்களுக்கு ரூ.5,000 ரொக்கத் தொகையும், இரண்டாம் இடத்தில் வெற்றிபெ ற்றவர்களுக்கு ரூ.4,000 ரொக்கத்தொகையும், மூன்றாம் இடத்தில் வெற்றிபெற்றவர்களுக்கு ரூ.3,000 ரொக்கத் தொகையும் மற்றும் சான்றிதழ்களும் இன்றைய தினம் வழங்கப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட நூலக அலுவலர் முருகன், கல்லூரி முதல்வர் கோமதி, போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் ஜானகி ராஜா, சண்முகம், மகாலட்சுமி உட்பட பல்வேறு நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.




■ மதுரை மாவட்டம், டாக்டர்.தங்கராஜ் சாலை பகுதியில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிட்டங்கியில் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரநிதிகள் தேர்வு செய்த வாக்குப்பதிவு இயந்திரங்களில் மாதிரி வாக்குப்பதிவு பணிகள் நடைபெறுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் பார்வையிட்டார்.

# தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது



தென்காசி, ஜன.10-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

தென்காசி மாவட்டத்தில் 2025 -2026 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் வரை ஒத்திசைவு செய்யப்பட்ட நெல் 41416 ஹெக்டர், சிறுதானியங்கள் 25241 ஹெக்டர், பயறு வகைகள் 26807 ஹெக்டேர் பருத்தி 1237, கரும்பு 1404 ஹெக்டர், எண்ணெய் வித்து - 1064 ஹெக்டேர், பழங்கள் 10370 ஹெக்டேர், காய்கறிகள் 3084 ஹெக்டேர், வாசனைப் பயிர்கள் 677 ஹெக்டேர், மலைப்பயிர்கள் 14447 ஹெக்டேர், மருத்துவப் பயிர்கள் - 20 ஹெக்டேர் பூக்கள் 658 ஹெக்டேர் பரப்பும் ஒத்திசைவு செய்யப்பட்டது. மழையளவு, நீர் இருப்பு விபரம் மற்றும் இடுபொருட்கள் இருப்பு விபரம் அனைத்து விவசாயிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. தற்போது தென்காசி மாவட்டத்தில் பிசான பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள இடங்களில் விவசாயிகள் பயன்பெற வேண்டி முதற்கட்டமாக 46 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலம் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது என்ற விபரம் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. வேளாண்மைத்துறை மூலம் வேளாண்மை மற்றும் அதன் தொடர்புத்துறை திட்டங்களை உள்ளடக்கிய கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

குருவிகுளம் வட்டார வேளாண்மைத் துறை மூலம் அட்மா திட்டத்தின் கீழ் இரண்டு பயனாளிகளுக்கு ரூ.12,000/ மதிப்பில் காட்டு விலங்கு மற்றும் காட்டுப் பன்றியைக் கட்டுப்படுத்துவதற்கான செயல் விளக்க இடுபொருட்களை மானியத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட பெறப்பட்ட 154 மனுக்களுக்கு 10 நாட்களுக்குள் விரிவான மற்றும் விவசாயிகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய பதிலை வழங்குமாறு அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் திரு.ரா. ராஜ்மோகன், வேளாண்மை இணை இயக்குநர் செ.அமலா, வேளாண்மை துணை இயக்குநர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ச.கனகம்மாள், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.கு. நரசிம்மன், வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம்) திருமதி. வசந்தி, தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி. ஜெசிமா பானு மற்றும் அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள், அனைத்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், அனைத்து துறை அலுவலர்கள், அனைத்து விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாய பெருமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



## கடலூர் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் "சிப்காட் போகி" தூய்மைப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார்

கடலூர், ஜன.10-

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் சார்பாக "சிப்காட் போகி" கடலூர் சிப்காட் தொழிற் பூங்கா வளாகத்தில் தூய்மைப்படுத்தும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவிக்கையில்,

2026 போகிப் பண்டிகையினை முன்னிட்டு மாவட்டந் தோறும் அனைத்து நகரம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள பொது இடங்கள் மற்றும் அரசு அலுவலகங்களை தூய்மையாக பராமரித்திட தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் அரசு அலுவலகங்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றுவதுடன் அரசு அலுவலகங்கள் தூய்மையாக தொடர்ந்து பராமரித்திடவும் வழிவகை செய்யப்படும். மேலும், சாலைப்பகுதிகள், பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் தினந் தோறும் தூய்மை செய்யப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் சார்பாக "சிப்காட் போகி" என்ற விரிவான தூய்மை பிரச்சாரத்தின் தொடக்க விழா கடலூர் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் சுத்தம் செய்யும் பணி துவக்கிவைக்கப்பட்டது.

இன்று 09.01.2026 முதல் 14.01.2026 அன்று வரை வளாக த்தில் உள்ள அனைத்து சாலைகள், மழைநீர் வடிகால் வாய்க்கால் மற்றும் பசுமை பூங்காவினை 25 தூய்மைப் பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சிப்காட் திட்ட அலுவலர் காந்திமதி உட்பட பல்வேறு நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.

### இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நேஷனல் அகாடமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில்

## மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பாரத சாரண சாரணிய இயக்கத்தில் 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் இராஜ்யபுரஸ்கார் விருது பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டினர்

இராமநாதபுரம், ஜன.10-

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நேஷனல் அகாடமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் இ.ஆ.ப., அவர்கள் பாரத சாரண சாரணிய இயக்கத்தில் 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் இராஜ்யபுரஸ்கார் விருது பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டி, வாழ்த்துகளை தெரிவித்து பேசுகையில்,

மாணவர்கள் தன்னார்வத்தோடு பிறருக்கு உதவி செய்திட தயாராக இருக்க வேண்டும். நாட்டு நலனில் முழு அக்கறை உடையவராக இருப்பதற்கு சாரணர் இயக்கம் நமக்கு பயிற்சி அளிக்கிறது. சுலீரண இயக்கத்தில் வழங்கப்படும் பயிற்சி யானது பிறகால வாழ்வில் மனிதநேயத்தோடும், நம்பிக்கை உள்ளவர்களாகவும், பிறருக்கு உதவுபவர்களாகவும், நாட்டை நேசிக்கக் கூடியவர்களாக வாழ்வதற்கு பயிற்சி அளிக்கிறது. இந்த பயிற்சியில் மாணவ, மாணவிகள் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி மாநில அளவிலும், தேசிய அளவிலும் நடத்தப்படும் பயிற்சிகளில் கலந்து கொண்டு நடத்தப்படும் போட்டிகளில் வெற்றி பெற்று நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி ரெஜினி அவர்கள், சாரண சாரணிய இயக்கத்தின் மாவட்ட தலைவர் திருமதி பரிமளா ஆண்டனி அவர்கள், இராமநாதபுரம் மாவட்ட சாரண, சாரணிய இயக்கத்தின் செயலாளர் திரு.செல்வராஜ் அவர்கள், நேஷனல் அகாடமி மெட்ரிக் மேலநிலைப்பள்ளி முதல்வர் ராஜமுத்து அவர்கள், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் நேர்முக உதவியாளர் ஆரோ க்கிய தாஸ் அவர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## தொழிற்புரட்சி 5.0 மற்றும் உருவெடுக்கும் தொழில்நுட்பங்கள்: ஐசிஎம்ஏஐ தேசிய மாநாட்டில் முக்கிய ஆலோசனை

கோவை, ஜன.10-

இந்திய அரசின் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் கட்டுப் பாட்டில், நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டபூர்வ அமைப்பான இந்திய அடக்கவிலையியல் கணக்காளர்கள் நிறுவனம் (ஐசிஎம்ஏஐ), தனது 63வது தேசிய அடக்கவிலையியல் மற்றும் மேலாண்மைக் கணக்காளர்கள் மாநாடு (என்சிஎம்ஏசி2026) ஆனது கோவையில் ஜனவரி 9 - 11 தேதிகளில் நடக்கிறது. என்சிஎம்ஏசி 2026, "RISE India – இந்தியாவையும் சிஎம்ஏஉறுப்பினர்களையும் மறுநிலைப்படுத்தல், வளர்ச்சியை தீவிரப்படுத்தல், திறனை வலுப்படுத்தல் மற்றும் திறன்களை மேம்படுத்தல் என்ற உட்கருத்தில் நடைபெறுகிறது. "விக்சித் பாரத் 2047"




என்ற இந்தியாவின் தொலை நோக்கு பார்வையின் அங்கமான: அடக்கவிலை போட்டித் திறனை வலுப்படுத்துதல், உற்பத்தித் திறனை உயர்த்தல், சுற்றுச்சூழல் சமூக மற்றும் ஆளுமை நிலைத்தன்மை (இஎஸ் ஜி) மற்றும் நடைமுறைகளை செயல்படுத்துதல், தொழிற்புரட்சி 5.0, உலகளாவிய ஆலோசனை சூழல் மற்றும் உருவெடுக்கும் தொழில்நுட்பங்கள், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தரவு சார்ந்த முடிவெடுக்கும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் சிஎம்ஏ உறுப்பினர்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும். என்சிஎம்ஏசி2026 மாநாட்டில் மத்திய மாநிலப் பொதுத்துறை, தனியார் மற்றும் உயர்கல்வி நிறுமங்கள், உயரிய தணிக்கைஆலோசனை நிறுமங்களைச் சார்ந்த சாலச்சிறந்த வல்லுனர்கள், பேச்சாளர்கள் பங்கேற் கின்றனர்.

என் சிஎம்ஏசி 2026 மாநாட்டில், தொழில்துறை கூட்டமைப்புகள், அரசு மற்றும் அரசு சாரா ஒழுங்குமுறை அமைப்புகள், நிதி நிறுவனங்கள், பிற தொழில்முறை அமைப்புகளைச் சேர்ந்த 1000 பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநாட்டின் நிகழ்ச்சிகள் நேரலையாக வழங்கப் படுகிறது. தொழில்முனைவு மனப்பாங்கு, வலுவான தொழில்துறை அடித்தளம் , புதுமை சார்ந்த சூழல் ஆகியவற்றில் புகழ்பெற்ற கோவையில் , சிறப்பு மிகு இம் மாநாடு நடைபெறுவது பெருமைமிக்க தருணமாகும் என்று சிஎம்ஏடிசிஎ ஸ்ரீனிவாச பிரசாத், தலைவர், ஐசிஎம்ஏஐ, முதன்மை புரவலர், 63வது என்சிஎம்ஏசி 2026 தெரிவித்தார்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லும் ஜல்லிக்கட்டு நடைபெறவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்து பாளையிட்டார். மாவட்ட காலம் கண்காணிப்பாளர் கே.வி காட்ட சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேஅர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம், சேதுபதி மேல்நிலைப்பள்ளியில் திருக்குறள் வார விழாவில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான குறளாசிரியர் மாநாடு, 15 அரசு ஊழியர்கள் மற்றம் 15 ஆசிரியர்களை தேர்வு செய்வதற்கான எழுத்துத் தேர்வு நடைபெற்றது




■ அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், எம்.ஆர்.பி முத்து மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் ஓமலூர் மற்றும் காடையாம்பட்டி வட்டத்தைச் சேர்ந்த 476 பயனாளிகளுக்கு ரூ.3.81 கோடி மதிப்பீட்டிலான வீட்டுமனை பட்டாக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் வழங்கினார்.




■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டத்தில் "உங்க கனவ சொல்லுங்க" எனும் புதிய திட்டத்தை காணொளிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுமக்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணகுமார் ஆகியோர் முன்னிலையில் பெற்றுக்கொண்டு, தனித்துவமான அடையாள எண்ணுடன் கூடிய கனவு அட்டைகளை வழங்கினார்கள்.

## தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்க கனவ சொல்லுங்க.." திட்ட தொடக்க நிகழ்வினைத் தொடர்ந்து, அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டத்தில் தன்னார்வலர்களுக்கு, பொதுமக்களிடையே கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கான தொகுப்புக்களை வழங்கி தொடங்கி வைத்தார்

சிவகங்கை, ஜன.10-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் (9.1.2026) தொடங்கி வைக்கப்பட்டுள்ள " உங்க கனவ சொல்லுங்க.." திட்ட தொடக்க நிகழ்வினைத் தொடர்ந்து, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக எல்.சி.டி.எல் பழனியப்பன் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தலைமையில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.மாங்குடி அவர்கள் முன்னிலையில், தன்னார்வலர்களுக்கு பொதுமக்களிடையே கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கான தொகுப்புக்களை (Kit) வழங்கி, தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் முறையாக சிந்தித்து, உரிய திட்ட பயன்களை தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கிட வேண்டும் என்ற உயரிய நோக்கில் நாளுக்கு நாள் பல்வேறு புதிய திட்டங்களை தமிழகத்தில் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப் படையில், இந்தியாவில் நம்பர் ஒன் முதலமைச்சராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள்.

தேர்தல் காலத்தில் சொன்ன வாக்குறுதிகள் மட்டுமின்றி, சொல்லாத பல்வேறு புதிய அறிவிப்புகளையும் அறிவித்து, திட்டங்கள் வாயிலாக பொதுமக்களை பயன்பெற செய்து வருகிறார்கள்.

அந்தவகையில், தமிழர் திருநாள் தைப்பொங்கல் 2026ஐ தமிழர்கள் சிறப்பாக கொண்டாடிடும் வகையில் நியாயவிலைக் கடைகள் மூலம் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூபாய் 3,000/ ரொக்க தொகை வழங்கும் திட்டம், கல்லூரி மாணாக்கர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக "உலகம் உங்கள் கையில்" - மடிக்கணினிகள் வழங்கும் திட்டம், பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம், பொதுமக்களின் உடல்நலத்தினை பேணிக்காத்திடும் பொருட்டு நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், மாதரசிகளுக்கு மாதம் ரூ.1,000/ வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விரிவாக்கம், மாணாக்கர்கள் உயர்கல்வி




யினை இடைநிற்றலின்றி தொடர்வதற்கு புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் போன்ற எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்ற திட்டங்கள் அனைத்தும் வரலாற்று சிறப்புமிக்க முன்னெடுப்பு திட்டங்களாக அமைந்துள்ளது.

முன்னதாக, பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிடும் பொருட்டு, உங்கள் தொகுதியில் ஸ்டாலின், முதல்வரின் முகவரி, உங்களுடன் ஸ்டாலின் போன்ற திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டு, தகுதியான பயனாளிகளுக்கு உரிய பயன்கள், உடனடியாக வழங்கப் பட்டுள்ளது.

அவ்வாறாக, பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்தது மட்டுமின்றி, அவர்களின் கனவுகளையும் நிறைவேற்றுகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "உங்க கனவ சொல்லுங்க" என்ற புதிய திட்டமும் இன்றையதினம் (9.1.2026) திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசின் சார்பில் நாளுக்கு நாள் அறிவிக்கப்பட்டு வரும் புதிய திட்டங்கள் குறித்தும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்நிகழ்ச்சியின் வாயிலாக எடுத்துரைத்துள்ளார்கள். அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், காணொலி காட்சி வாயிலாக பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த பொதுமக்களிடமும், அவர்களது கனவுகள் குறித்து கேட்டறியப்பட்டது.

தமிழ்நாட்டு மக்களுடைய விருப்பங்களையும் தேவைகளையும் சேகரித்து, அந்தந்த தரவுகளை பயன்படுத்தி எதிர்கால கொள்கைகளையும், மேம்பாட்டு திட்டங்களையும் வடிவமைப்பதற்கு ஏதுவாக, "உங்க கனவ சொல்லுங்க" எனும் புதிய திட்டம் அமைந்துள்ளது.

மேலும், இப்புதிய திட்டமானது தமிழ்நாடு அரசின் திட்டங்கள் குறித்த பொதுமக்களின் கருத்துக்களைச் சேகரிப்பது மற்றும் குடும்பங்கள், உள்ளூர் பகுதிகள் மற்றும் ஒட்டு மொத்த மாநிலத்திற்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பிரச்சினைகளைக் கண்டறிவது போன்றவைகளை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. அவ்வாறாக, சேகரிக்கப்படும் தரவுகள், குடிமக்கள் தங்கள் கனவுகளை நனவாக்க உதவுவதற்கும், 2030 ஆம் ஆண்டு வரை மாநிலத்தின் வளர்ச்சியை வழிநடத்துவதற்கும் ஒரு தொலைநோக்கு ஆவணத்தை தயாரிக்கப் பயன்படுத்தப்படவுள்ளது.

அதற்கென, தமிழகம் முழுவதும் பொதுமக்களிடையே கணக்கெடுப்பு பணிகளை மேற்கொ ள்வதற்கு 50,000 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்ப டவுள்ளனர்.

அதில், சிவகங்கை மாவட்டத்தில் "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தின் கீழ் பொதுமக்களிடையே கணக்கெ கடுப்பு மேற்கொள்வதற்கு 892 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். 1 தன்னார்வலர் நாள் ஒன்றுக்கு சராசரியாக 30 வீடுகளில் கணக்கெடுப்பு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, நகர்ப்புறம் மற்றும் ஊரக பகுதிகளிலுள்ள சுமார் 3,80,738 வீடுகள் தோறும் நேரில் கணக்கெடுப்பு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அவ்வாறாக, மேற்கொள ளப்படும் கணக்கெடுப்பு குறித்த விபரங்கள் ஒரு கைபேசி செயலியின் மூலம் பதிவு செய்யப்படும். மேலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தனித்துவமான அடையாள எண்ணும், விவரங்களைப் பெற்றதற்கு அடையாளமாக கனவு அட்டையும் வழங்கப்படும்.

"உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தின் கீழ் பொதும க்களிடையே கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஈடுபடுத்த ப்படவுள்ள தன்னார்வ லர்களுக்கு கனவு அட்டை, தன்னார்வலர்களுக்கான அடையான அட்டை, பொதுமக்களுக்கான படிவம், ஒரு தொப்பி, புதிய சிம் கார்டு ஆகியவைகளை உள்ளடக்கிய தொகுப்புகள் (Kit) வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தன்னார்வலர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைவரும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ள வேண்டும். பொதுமக்கள் இதுபோன்ற வாய்ப்பினை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு, தங்களது விருப்பங்கள் மற்றும் தேவைகளை தெரிவித்திடல் வேண்டும்.

இதுபோன்று, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, தமிழக மக்கள் அனைவரின் கனவுகளையும் நிறைவேற்றும் அரசாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு திகழ்ந்து வருகிறது என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தெரி வித்தார்.

இந்நிகழ்ச்சியில், காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் திரு.ந.குணசேகரன், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி கவிதப்பிரியா, உதவி திட்ட அலுவலர்கள், காரைக்குடி வட்டாட்சியர் திரு.ராஜா மற்றும் தன்னார்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## சிவகங்கையில் திமுக “வெற்றி வாக்குச்சாவடி” ஆலோசனை கூட்டம்: கிங் கார்த்திக் ஏற்பாட்டில் உற்சாகமாக நடைபெற்றது

சிவகங்கை, ஜன.10-

சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக சார்பில், “என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி” எனும் தலைப்பிலான பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம் சிவகங்கை அடுத்த அரசனேரி கீழமேடு பகுதியில் நடைபெற்றது.

முன்னிலை மற்றும் பங்கேற்பாளர்கள்:

மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் அரசனேரி கீழமேடு கிங் கார்த்திக் இந்த கூட்டத்திற்கான சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். சிவகங்கை வடக்கு ஒன்றியச் செயலாளர் திருமலை ஆ. முத்துராமலிங்கம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, எதிர்வரும் தேர்தல் பணிகள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்களின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆலோசனைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் கிளைக்கழகச் செயலாளர் செந்தில்குமார், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.எம். மதிவாணன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி திருமலை மு. குமணன், மின்திட்ட தொமுச முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கலந்துகொண்ட நிர்வாகிகள்:

இந்தக் கூட்டத்தில் கிளைக்கழகச் செயலாளர்கள் புதிய அரசு, செந்தில்குமார், மணி (சூரக்குளம்), முருகன் (வஸ்தாபட்டி) மற்றும் விஸ்வநாததாஸ் நகர் கிளைக்கழக இளைஞரணி கார்த்திக், போஸ் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், திமுக நிர்வாகிகள் திவான், திருத்தணி, சங்கர், கமலஹாசன், முத்து, கண்ணன், ஆனந்தன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கட்சித் தொண்டர்களும், பொதுமக்களும், குறிப்பாகப் பெருந்திரளான பெண்களும் கலந்து கொண்டனர்.

நிறைவு:

தேர்தல் களத்தில் வாக்குச்சாவடி அளவில் கட்சியைப் பலப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்ட இக்கூட்டம், கிங் கார்த்திக் அவர்களின் ஒருங்கிணைப்பில் எழுச்சியுடன் நிறைவு பெற்றது..

## பனங்காடியில் திமுக சார்பில் பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு மற்றும் ரொக்கப்பணம் வழங்கப்பட்டது



காளையார்கோவில், ஜன.10-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வடக்கு ஒன்றியம் பனங்காடி பகுதியில் உள்ள நியாய விலைக் கடையில், பொங்கல் திருநாளை முன்னிட்டு பொதுமக்களுக்குப் பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டம்:முதலமைச்சர் ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியில், ஏழை எளிய மக்கள் பொங்கல் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், பனங்காடி, விஜயமாணிக்கம், சாத்தனி, மற்றும் சூரவத்தி இலுப்பக்கோட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு இந்தப் பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது. இதில் பொங்கல் பொருட்கள், முழு நீளக் கரும்பு மற்றும் ரொக்கப்பணம் 3,000 ரூபாய் ஆகியவை அடங்கும்.

பங்கேற்ற நிர்வாகிகள்:

பனங்காடி கிளைக்கழக திமுக சார்பில் நடைபெற்ற இந்நிழ்ச்சியில், பின்வரும் நிர்வாகிகள் கலந்துகொண்டு பொதுமக்களுக்குத் தொகுப்புகளை வழங்கினர்: இராம. பாலாஜி கிளைக்கழகச் செயலாளர்,உமாசங்கர் மாவட்டப் பிரதிநிதி (வழக்கறிஞர்),கே. ஆர். பாண்டி மேலமைப்புப் பிரதிநிதி,தாமோதரன் கிளை அவைத்தலைவர்,அல்லூர் ரவிச்சந்திரன் கழக மூத்த முன்னோடி மற்றும் நீர்ப்பாசன சங்கத் தலைவர்,சங்கரலிங்கம் ஒன்றியப் பிரதிநிதி, தனுஷ்கோடி இலுப்பக் கோட்டை கிளைக்கழகச் செயலாளர்,வீராணி சதீஷ்குமார் வடக்கு ஒன்றிய வழக்கறிஞர் அணி அமைப்பாளர்

கர்ண. அருண்குமார் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் மற்றும் இராணியூர் கிளைக்கழகச் செயலாளர், மலைச்சாமி (அல்லூர்) மற்றும் பி. மலைச்சாமி (விஜயமாணிக்கம்).

இந்த நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு அரசின் பொங்கல் பரிசுகளை மகிழ்ச்சியுடன் பெற்றுச் சென்றனர்.



## வத்தலகுண்டு ஒன்றியம் விருவீடு பகுதியில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டது

திண்டுக்கல், ஜன.10-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகா வத்தலகுண்டு ஒன்றியத்தில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டது. தமிழக முதல்வரின் அறிவிப்பு படி ஒரு கிலோ அரிசி ஒரு கிலோ சர்க்கரை மற்றும் முழு கரும்புடன் 3000 ரூபாய் ரொக்கம் ஆகியவற்றுடன் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளராக வத்தலகுண்டு திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் கனிக்குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பரிசு தொகுப்பினை பொதுமக்களுக்கு வழங்கினார். விருவீடு கூட்டுறவு செயலர் ராஜா முன்னிலை வகித்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் ஒன்றிய குழு பொறுப்பாளர்கள், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள், மாணவரணி மற்றும் மகளிர் அணியினர், பேரூர் நிர்வாகிகள் மற்றும் கிளை பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் சார்பு அணி பொறுப்பாளர்கள் என ஏராளமானோர் கலந்து.மேலும் பொங்கல் சிறப்பு பரிசு தொகுப்பினை பெற்றுக் கொண்ட பயனாளிகள் தமிழக முதல்வருக்கு நன்றியையும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.




## தேசிய பாதுகாப்பு மாதத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது

மதுரை, ஜன.10-

மதுரை மாநகர ஆணையர் முனைவர் ஜே.லோகநாதன் ஐபிஎஸ் ஆணையின்படி, போக்குவரத்து துணை ஆணையர் எஸ் வனிதா வழிகாட்டுதலின்படி.. 37 வது தேசிய பாதுகாப்பு மாதத்தின் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக,மதுரை சிம்மக்கல் பகுதியில் அமைந்துள்ள,வரலாற்று புகழ் பெற்ற மகாகவி பாரதியார் ஆசிரியர் பணிபுரிந்த சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர் பெருமக்களுக்கும் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது.. இதில் 300 மாணவர்களும் 10 ஆசிரிய பெருமக்களும் கலந்து கொண்டனர்.. நிகழ்ச்சியின் இறுதியில் திலகர் திடல் போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி அவர்கள் மாணவர்களுடன் சாலை பாதுகாப்பு குறித்தும் போதைப்பொருள் எதிர்ப்பு குறித்தும் உறுதிமொழி மேற்கொண்டார்.. உடன் பள்ளி தலைமை ஆசிரியர் நாராயணன் திலகர் திடல் சார்பு ஆய்வாளர்கள் லிங்க்ஸ்டன், பாண்டியராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்



■ தமிழக அரசு பள்ளி கல்வித்துறை சார்பாக தேனி மாவட்டம் ராயப்பன்பட்டியில் நடைபெற்ற 38 மாவட்டங்களுக்கு இடையிலான மாநில அளவிலான சிலம்பம் போட்டியில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சீனி ஆசான் சிலம்பம் பள்ளியின் சார்பாக பயிற்சியாளர்கள் செல்வம் மற்றும் முனியாண்டி தலைமையில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டதில் இரட்டைக்கம்பு பிரிவில் மாணவர்கள் ரித்தீஸ், புகழேஷ் தங்கப்பதக்கத்தையும், ஒற்றைக்கம்பு பிரிவில் அகதீஸ்குமார் தங்கப்பதக்கத்தையும், மதன்குமார் வெள்ளிப்பதக்கத்தையும், கம்புச்சண்டை பிரிவில் ஷரோன் மற்றும் கரண்குமார் ஆறுதல் பரிசையும், ஒற்றைக்கம்பு பிரிவில் மாணவிகள் சுவாதி, ரோஷிணி, ஷாலினி ஆறுதல் பரிசையும் பெற்று சிவகங்கை மாவட்டத்திற்கும், பயின்று வந்த சிலம்ப பள்ளிக்கும் பெருமை சேர்த்துள்ளனர்ஞ் சீனி ஆசான் சிலம்பம் பள்ளி மாணவ மாணவிகள் தொடர்ந்து 4 ஆவது முறையாக தமிழக அரசு பள்ளி கல்வித்துறை மாநில அளவிலான சிலம்பம் போட்டியில் வென்றது குறிப்பிடத்தக்கது



■ சிவகங்கை மாவட்டத்தில், மானாமதுரை ரயில்வே காலனி நியாயவிலை கடையில், தமிழர் திருநாள் பொங்கலை முன்னிட்டு அரசு வழங்கும் பொங்கல் தொகுப்புகள் பொதுமக்களிடம் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் 2026 ஆம் ஆண்டு பொங்கல் தொகுப்புகளை துணைப் பதிவாளர் தினேஷ்குமார் வழங்கினார். உடன் விற்பனையாளர் கோபாலகிருஷ்ணன் இருந்தார்.



## மானாமதுரையில் மின் பயனீட்டாளர்கள் கூட்டம் (ஜன13 புதன்கிழமை) நடைபெறுகிறது

சிவகங்கை, ஜன.10-

சிவகங்கை மின் பகிர்மான வட்டம் மேற்பார்வை பொறியாளர் பொறிஞர். மின் செ.விசாலாட்சி ங்ி.ணி,விமிணி., தலைமையில் பயனீட்டாளர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 13.01.2026 அன்று காலை 11.00 மணி முதல் 1.00 மணி வரை செயற்பொறியாளர் / பகிர்மானம் / மானாமதுரை கோட்டத்தில் நடைபெறுவதால் மானாமதுரை கோட்டத்திற்குட்பட்ட மின் பயனீட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் மேற்படி கூட்டத்தில் மேற்பார்வை பொறியாளர் அவர்களை நேரில் சந்தித்து தங்களின் மின்வாரியம் சம்மந்தமான குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மானாமதுரை மின்செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்..




## அகரம் தென் பிரதான சாலையில் பிரான்ஸ் ஸ்ரீ பாலாஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரில் சார்பில் புகையில்லா போகியை கொண்டாட விழிப்புணர்வு பேரணி

தாம்பரம், ஜன.10-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பொன்மாரில் அமைந்துள்ள பிரான்ஸ் ஸ்ரீ பாலாஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரின் நாட்டு நலப்பணித்திட்டம், தாம்பரம் எக்ஸ்னோரா, தாம்பரம் மாநகராட்சி ஆகியோர் இணைந்து பொதுமக்களிடையே புகையில்லா போகியைக் கொண்டாட பொது மக்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த பேரணியை தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் அவர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். பின்னர் புகையில்லா போகியை கொண்டாடும் வகையில் பாதாகைகள் ஏந்தி சாலையில் நின்று விழப்புணர்வு ஏற்படுத்தினர். அதனை தொடர்ந்து உறுதி மொழி ஏற்றனர்.மப்பேடு சந்திப்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட ஆர்வலர்கள், கல்லூரி முதல்வர் முனைவர் பா. தனவந்தினி, நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் டி.பத்மாவதி, மாமன்ற உறுப்பினர் ரமாதேவி செந்தில் குமார், எக்ஸ்நோரா தாம்பரம் தலைவர் சீதாராமன், கோவிந்தராஜ், தலைவர் எக்ஸ்னோரா பெருநகர சென்னை, ஜெமிமா பிரியா, ஒருங்கிணைப்பாளர், சென்னை எக்ஸ்னோரா ஆகியோர் கலந்துகொண்டனர்.-



## கூட்டுறவு மற்றும் உணவு நுகர்வோர் துறை சார்பாக பொங்கல் தொகுப்பு வழங்கும் விழா

பெரியகுளம், ஜன.10-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே தமிழக முதலமைச்சர் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு பொங்கல் பரிசு பொருட்களை கூட்டுறவு மற்றும் உணவு நுகர்வோர் துறையின் மூலம் எருமலைநாயக்கன்பட்டி,டி. வாடிப்பட்டி பகுதியில் உள்ள மக்கள் பொங்கல் தொகுப்பான ரூபாய் 3000 சேலை வேஷ்டி கரும்பு பச்சை அரிசி ஜீனி முதலிய பொருட்களை அனைவரும் வரிசையில் நின்று அமைதியான முறையில் மனமகிழ்ச்சியுடன் தமிழக அரசின் இந்த திட்டத்திற்கு வாழ்த்து தெரிவித்தனர்.




## நந்திவரம் அரசினர் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா

செங்கல்பட்டு, ஜன.10-

செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் கூடுவாஞ்சேரி அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

விழாவில் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சந்திரசேகர், பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீவித்யா ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர மன்ற தலைவர் எம் கே டி கார்த்திக், நகர மன்ற துணைத் தலைவர் ஜி.கே. லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் ஆகியோர் கலந்து கொண்டு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 300 மாணவர்களுக்கும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி 655 மாணவிகளுக்கும் 955 தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர மன்ற உறுப்பினர்கள், பள்ளி ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161